# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

FIRST SEMESTER – **APRIL 2023**

**16/17/18UTL1MC01 – RELIGIOUS AND ETHICAL LITERATURE**

Date: 09-05-2023 Dept. No. Max. : 100 Marks
Time: 01:00 PM - 04:00 PM

**பகுதி – அ (10x2=20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. பன்னிரண்டாம் திருமுறை எது? எழுதியவர் யார்?
02. திருவாசகத்தைப் பாடியவர் யார்? அந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
03. இராமலிங்க அடிகளார் படைத்த இலக்கியங்களைச் சுட்டுக.
04. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்று போற்றப்படுபவர் யார்? அவரின் வளர்ப்புத் தந்தையின் பெயரென்ன?
05. இரட்சணிய யாத்திரிகம்' – பொருள் கூறுக.
06. தேம்பாவணி – விளக்கம் தருக.
07. குணங்குடியாரின் ஊர் யாது?
08. 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' – இத்தொடரில் இடம்பெற்ற, 'நாலும்', 'இரண்டும்' சுட்டும் இலக்கியங்களின் பெயர்களை எழுதுக.
09. 'திரிகடுகம்' என்றால் என்ன?
10. புதிய ஆத்திசூடி என்னும் இலக்கியவகைமையைப் பாடியவர்கள் யாவர்?

**பகுதி – ஆ (5x7=35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.**

11. திருஞானசம்பந்தர், சிவனைப் போற்றும் பாங்கினைச் சுட்டுக.
12. இராமலிங்கரின் அருள்விளக்கப்பாடற் கருத்துகளைத் தொகுக்க.
13. ஆண்டாள் கண்ட கனவினை எழுதுக.
14. தேம்பாவணிக் காப்பியம் கூறும் எருசலேம் நகரச் சிறப்புகளைக் கூறுக.
15. இனியவை நாற்பது நவிலும் இனியவற்றைப் பகிர்க.
16. நும்பாடப்பகுதியியல் இடம்பெற்ற திரிகடுகப்பாடற் செய்திகளைத் தருக.
17. பாரதியாரின் புதிய ஆத்திசூடியிலிருந்து எவையேனும் பத்து வரிகளை எழுதி விளக்கம் கூறுக.

**பகுதி – இ (3x15=45 மதிப்பெண்கள்)**

**மூன்று பக்க அளவில் விடையளிக்க.**

18. நும்பாடப்பகுதியில் இடம்பெற்ற திருநாவுக்கரசரின் பாடற் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

**( அல்லது )**

குலசேகர ஆழ்வார் வேண்டும் பிறப்புகளை வரிசைப்படுத்துக.

19. இரட்சணிய யாத்திரிகத்தில் இடம்பெற்ற கையடக்கப்பதிகப் பாடற்செய்திகளைக் கட்டுரைக்க.

**( அல்லது )**

பரம்பொருளின் பண்புகளாக குணங்குடியார் கூறுவனவற்றை விளக்கியுரைக்க.

*20. கல்வியின் சிறப்புகளாக நாலடியார் பகர்வனவற்றைப் பட்டியலிடுக.*

***( அல்லது )***

*ஔவையாரின் மூதுரை கூறும் அறக்கருத்துகளைத் தொகுத்தெழுதுக.*

------------------------